**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 391/2022**
**Deposition of witness of Defendant – D.W.1 (முருகேசன்)**
**15.10.2024**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 15th day of October 2024.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நானும், எனது சகோதரர் கணேசன் மற்றும் தாயார் ஜெயலெட்சுமி ஆகியோர் ஒரே குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நான் திருப்பூருக்கு வேலைக்கு சென்றபோதும், எனது சகோதரர் மலேசியாவில் இருந்தபோதும் எனது தாயார் தான் குடும்பத்தை நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். எனது தாயார் தான் குடும்ப மேலாளர் என்ற முறையில் குடும்பத்தை நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். குடும்ப வரவு செலவுகளை எனது தாயார் தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

2. வாதி முருகனின் குடும்பத்தார் மூதாதையர் காலம் முதல் எங்கள் வீட்டில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். கூலிக்கு வேலை பார்த்து வந்தார்கள். ஆடு மாடு மேய்த்தல் மற்றும் விவசாய கூலி வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது சகோதரர் கணேசனின் கையெழுத்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது குடும்பத்திற்கு தனிப்பட்ட முறையில் நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து எனது சகோதரர் கணேசனின் கையெழுத்து இல்லை. அந்த கையெழுத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. நானும் கையெழுத்து போடவில்லை. வா.சா.ஆ.1ல் 3, 4, 5 பக்கங்களில் உள்ள கையெழுத்தும் கணேசன் கையெழுத்து

இல்லை. எனது தாயார் வாதிக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் எனது சகோதரர் கணேசன் கையெழுத்து போட்டுள்ளார் என்றும், அதனால் தான் அவரை சாட்சியம் அளிக்கவிடாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ளது கணேசனின் கையெழுத்து தான் என்றும், ஆனால் அவரது கையெழுத்து அல்ல என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. கணேசனை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. கணேசனை விசாரித்தால் வா.சா.ஆ.1ல் உள்ளது கணேசனின் கையெழுத்து என தெரிந்துவிடும் என்பதால் அவரை விசாரிக்க தயாராக இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் அவரது சகோதரர்கள் பெயரில் எனது தாயார் 2015ஆம் ஆண்டு நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் உண்மை தன்மை இல்லை என்பதால் அப்போதே முடிக்கப்பட்டது என்றால் சரிதான். குடும்ப கர்த்தா என்ற முறையில் எனது தாயார் குடும்பத்தை நிர்வகித்து வந்ததால் தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், ஆனால் பின்னிட்டு நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் எங்களது தூண்டுதலின் பெயரில் புகார் கொடுத்தார் என்றும் அந்த புகாரில் உண்மை இல்லை என்பதால் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.304/2015 என அசல் வழக்கை புதுக்கோட்டை கூடுதல் சார்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 26.07.2019ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 2009ல் எங்களிடம் தொலைபேசி வசதி இருந்தது என்றால் சரிதான். அடிக்கடி எனது தாயாருடன் பேசிக்கொள்வோம் என்றால் சரிதான். தாவா சொத்து கிரையம் பெற்ற விவரம் எதுவும் சொல்லவில்லை. எனது அண்ணன் வெளிநாட்டில் இருந்து 2003ல் வந்துவிட்டு 2009ல் திரும்பி சென்றுவிட்டார்.

6. சர்வே எண்.134/6 புஞ்சை நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் சோலைமணி என்பவர் உள்ளாரா என்றால் உள்ளார். அவரிடம் 22.03.2010ஆம் தேதி நானும், எனது சகோதரரும் சர்வே எண். 134/6க்கு புதிய சர்வே எண்.134/6பி சொத்தை கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. நானும் எனது சகோதரரும் சேர்ந்து சோலை மணிக்கு கிரையம் கொடுத்துவிட்டு வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 22.03.2010ஆம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் சோலைமணிக்கு நாங்கள் கொடுத்த கிரைய பத்திரத்தின் நகல் தான். (அந்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது). வா.சா.ஆ.7 ஏற்பட்ட சமயத்தில் தான் வாதிக்கு கிரையம் கொடுத்த வா.சா.ஆ.1 பத்திரத்தில் 3, 4, 5 பக்கங்களில் எனது சகோதரர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

7. மேற்படி எனது சகோதரர் கையெழுத்து போட்ட விவரம் தெரிந்து கொண்டே அந்த காலகட்டத்தில் எனது சகோதரர் இந்தியாவில் இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சோலைமணிக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் எனது தாயார் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7ல் எனது போட்டோ மற்றும் எனது சகோதரர் போட்டோ மட்டுமே உள்ளது என்றால் சரிதான். எனது சகோதரிகளுக்கு அவர்களது பாகத்தை பொறுத்து நிறைய சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.7 கிரைய பத்திரத்தில் எனது சகோதரிகள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். வாதிக்கு எனது தாயார் கிரையம் கொடுத்த சொத்து பாறை பூமி என்றால் வீட்டு மனையாகும். தாவா சொத்து வீட்டு மனை அல்ல என்றும், பாறை பூமி என்றும் சொன்னால் சரியல்ல. வீட்டு மனை என்றால் மதிப்பீடு சதுர அடியில் இருக்கும் என்றால் சரிதான். என்னிடம்

காட்டப்படும் தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பீட்டில் ஏக்கர் ரூ.2,00,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். (அந்த வழிகாட்டி மதிப்பீடு வா.சா.ஆ.8ஆக குறியீடு செய்யப்படுகிறது).

9. தாவா சொத்தையும் சேர்த்து மொத்தம் 15 சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.304/2015 என வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் தாவா சொத்திற்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அந்த பாகப்பிரிவினை வழக்கிற்கு எனது தாயார் தான் விவரம் சொன்னாரா என்றால் இல்லை, நான் தான் சொன்னேன். அந்த வழக்கிற்கு நான் விவரம் சொல்லவில்லை என்றும், எனது தாயார் தான் விவரம் சொன்னார் என்றும், அவர் தூண்டுதலின் பேரில் தான் வாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தையும் சேர்த்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதனால் தான் அந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

10. என்னிடம் காட்டப்படும் சிட்டாக்கள் (எண்ணிக்கை-3) எனது தகப்பனார் கோவிந்தசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். (அவை வ.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்படுகிறது).

11. என்னிடம் காட்டப்படும் வழிகாட்டி மதிப்பீடுகள் அ.வ.எண்.304/2015ல் கண்ட சொத்துக்களுக்கான வழிகாட்டி மதிப்பீடு என்றால் சரிதான். (அந்த வழிகாட்டி மதிப்பீடுகள் (எண்ணிக்கை -7) வ.சா.ஆ.10ஆக குறியீடு செய்யப்படுகிறது).

12. வா.சா.ஆ.10ல் கண்ட சொத்துக்களில் சர்வே எண்.70/3எ சொத்து மட்டும் சதுர அடியில் உள்ளது என்றால் சரிதான். இதர சொத்துக்களின் மதிப்பு தாவா சொத்தை விட கூடுதல் மதிப்பு உள்ளது என்றால் சரிதான். மணப்பாறை ரோட்டில் எங்களுக்கு சொந்தமாக சொத்து இருந்து தற்போது கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மணப்பாறை ரோடுதான் எங்கள்

ஊருக்கான மெயின் ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் உள்ள 15 செண்ட் சொத்தைதான் கிரையம் கொடுத்துள்ளோம். 40 செண்ட் சொத்தை கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

13. அந்த சொத்தை விற்றுதான் வீடு கட்டி வருகிறோம் என்றால் சரிதான். அந்த சொத்து 40 இலட்சத்திற்கு கிரையம் கொடுத்தோமா என்றால் 15 இலட்சத்திற்குதான் கிரையம் கொடுத்தோம். மணப்பாறை ரோட்டில் சொத்துக்கள் சதுர அடியில் விலை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் சதுர அடி ரூ.1000 இருக்குமா என்றால் இருக்கும்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஓம்/–C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.